


# நாம் யார்?

## விமான பாதுகாப்பு பயிலுனர் (AVSEC) பதவி

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் ஆனது இலங்கையில் உள்ள சர்வதேச விமானநிலையங்களை நிர்வகித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு சட்டரீதியான அதிகாரங்களை பெற்ற முழுமையான அரசுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்று என்பதோடு பேண்தகு பொருளாதாரம் ஒன்றை நோக்கி உலகளாவிய இணைப்புகளில் நட்புரீதியான விமான போக்குவரத்து பங்காளராக இருப்பதற்கு எதிர்பார்க்கிறது.

- **முந்தைய விளம்பரத்தின் இறுதித் திகதியாக இருந்த 2025.02.23 ஆம் திகதி, 2025.05.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**
- **குறிப்பு: 2025.03.23 ஆம் திகதிய விளம்பரத்தின்படி AVSEC பயிலுனர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை.**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் அபேட்சர்கள் உட்பட அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## சம்பளம்

மேலுள்ள பதவிக்கு கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக தேர்வு செய்யப்படுபவர்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கப்பெறும்.

## வயது

- **விண்ணப்ப இறுதித் திகதிக்கு (2025.05.31) 18–30 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.**
- **முன்னாள் படை வீரர் மற்றும் முன்னாள் STF** வீரர்கள் விண்ணப்ப இறுதித் திகதிக்கு (2025.05.31) 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

## பொதுவானவை

தேர்வு செய்யப்படும் அபேட்சகர்கள் தேவை ஏற்படும்போது நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் நிறுவனம் அமைந்துள்ள எந்த ஒரு இடத்திலும் பணியை மேற்கொள்ளல் வேண்டும்.

தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்ற ஆர்வமுடையவராக நீங்கள் இருந்தால், தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **www.airport.lk>Corporate>Careers** என்ற எமது இணையதளத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட சுயவிரபக்கோவையை **2025 மே 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது விரைதூதர் மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.** கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத மற்றும்/ அல்லது வேறு வடிவங்களில் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும்/ அல்லது எமது இணையதளத்தில் தரப்பட்ட மாதிரிக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கருத்திற் கொள்ளவும்.

தேர்வு நடைமுறையின் அனைத்து கட்டங்களிலும் தகுதி பெற்ற அபேட்சகர்களுக்கு மாத்திரமே அறிவித்தல் வழங்கப்படும் என்பதை கருத்திற் கொள்ளவும்.

**தலைவர்**
**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**